தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. { ருதிரோத்காரி௵ ஆடி௴ { பகுதி 4.

ஹீலியம்.
Helium

ராஜ மகேந்திரபுரத்து அரசாங்க கலாசாலையில் ஆசிரியரா யிருக்கும் ஸ்ரீமான் K. C. வீரராகவ ஐயர், M.A., L.T., F. C. S. எழுதியது.

பீடிகை.

சென்ற ஐரோப்பிய யுத்தத்திலே, நிலம் நீர் வழியாக அல்லாமலும் ஆகாச வழியாகவும் எதிரிகள் ஒருவரோடு ஒருவர் தாக்கிச் சண்டைசெய்தார்கள். ஆகாச வழியாகச் சண்டை செய்வதற்குச் சாதகமா யிருந்தவை ஆகாசக்கப்பல் என்பதும் ஆகாச விமானம் என்பதுமே. ஆகாசக் கப்பல், புகைக் கூண்டைப்போல், பெரியதாக இருக்கும். ஆந்திர தேசத்தில் சில உயர்தர உத்யோகஸ்தர்களுக்கு நல்விருந்து அளிக்கும் பொழுது காட்டும் வாண வேடிக்கைகளில் புகைக்கூண்டு ஒன்றாகும். காகிதத்தினாலும் துணியினாலும் பெரியதாகப் பை ஒன்று பண்ணி, அதைத் தலை கீழாக வைத்து, அதன் வாய்

மூலமாய் மத்தாப்புவை எரித்து வரும் புகையால் அதை நிரப்பி, வாய்க் கம்பில் ஒரு துணியையும் கொளுத்தி உயரக் கிளம்ப விட்டு விடுகிறார்கள். அது வெகு உயரம் கிளம்பி சில காலம் உலாவித் திரிகிறது. இதேமாதிரியாக ஆகாசக் கப்பலையும் செய்கிறார்கள். ஆனால் அது மிகப் பெரிதாக இருக்கும்; ஜனங்கள் உட்கார்ந்து அத்துடன் செல்வதற்கு வசதி பொருந்தியதாக இருக்கும்; அதற்குள் அடைத்து இருப்பது ஜலவாயு (Hydrogen). இந்த ஜலவாயுவுக்கு இரண்டு கெட்ட குணங்கள் இருக்கின்றன; ஒன்று, அது எளிதில் எரியக்கூடியது; இரண்டாவது, பிராணவாயுவுடன் கலந்து எரிந்தால், "படீர்" என்று வெடிக்கும் இயல்பை அடைவது. ஆனதால் இதை உபயோகிப்பதினின்றும் பெருத்த ஆபத்துகள் நேரிடுகின்றன. அதற்குப் பதிலாக ஜெர்மானியர்களும் அமெரிக்கா கண்டத்து ஐக்கிய நாட்டினர்களும் ஹிலியம் (Helium) என்ற வாயுவை உபயோகித்து வருகிறார்கள். அந்த ஹிலியத்தின் விபரங்களில் சிலவற்றை இங்கு அறிவோம்.

பூர்வ சரித்திரம்.

பூரண சூரிய கிரஹண காலத்தில் பூமியில் மங்கின வெளிச்சமாக இருக்கும். சூரியன் நன்றாய் மறை படும். அப்பொழுது அதை ஒரு தூரதிருஷ்டி கண்ணாடியால் பார்த்தால் சூரிய வட்டத்தினின்றும் இருபது ஆயிரம் மைல்வரை வீசி நிற்கும் ஜோதி தெரியவரும் அதை ஸ்பெக்டரம் (Spectrum) சோதனை செய்து பார்த்தபோது, அதுவரையும் தெரிந்துள்ள வஸ்துக்களுக்குள்ள அடையாள மில்லாததாக ஒரு சின்னம் தோன்றிற்று. அது ஒரு மூலப் பொருளின் அறி குறி யாகுமென்று நம்பி 1868-ல் அதற்கு ஹிலியம் என்று பெயரிட்டார்கள் அந்த வார்த்தை சூரியன் என்று

பொருள்படும் ஒரு கிரேக்க வார்த்தையின் சிதைவு. பிறகு 1895-ல் பிரசித்திபெற்ற சர் வில்லியம் ராம்சே என்ற இரசாயனி கிலீவைட் (Clevite) என்ற ஒரு கனிஜக் கல்லி (Mineral) லிருந்து இந்த வாயு வருவதைக் கண்டார். இப்பொழுது தான் அது நம் பூமியிலும் இருக்கிறது என்பது தெரிய வந்தது. அதன் பின்னர் நம்மைச் சுற்றி யிருக்கும் ஆகாசக் காற்றிலும் இருக்கிறது என்பது தெரிந்தது.

கிடைக்கும் இடங்கள்.

அது ஆகாசக் காற்றிலும் சில கனிஜக்கல்லிலும் கிடைக்கிறது என்று மேலே சொல்லப்பட்டது. பூமியைத் தோண்டி யிறைக்கப்படும் மண்ணெண்ணெயுடன் கலந்து வருகின்ற சில இயற்கைக் காற்றிலும் அது இருக்கின்றது. ஆகாசக் காற்றில் பத்து லக்ஷம் பங்கில் நாலுபங்குதான் இந்த ஹிலியம் கிடைக்கிறது. சில இயறகை வாயுக்களில் நூற்றுக்கு ஒன்று முதல் ஐந்து வரை கிடைக்கிறதாம். பிரான்ஸ் தேசததில் சில ஊற்றுக்களில் நூற்றுக்கு ஐந்து பங்கு இந்த வாயு கிடைக்கிறதாம். அமெரிக்காவில் டெக்சாஸ் (Texas) என்னும் ஜில்லாவில் கிடைக்கும் இயற்கைவாயுவில் 100-க்கு இரண்டு பங்கு கிடைக்கிறது; இப்பொழுது அந்த இடத்தில் தினசரி 30,000 முதல் 40,000 டன்வரை அதைச் சேகரித்து வருகிறார்கள். சண்டையில் இடர்ப்பட்ட ஆங்கிலேயர்களும் தங்கள் நாட்டில் அது கிடைக்குமா என்று சாஸ்திரம் வல்லார் வாய்க்கேட்டார்கள் மிகுதியாய்க் கிடைக்கவில்லை. தமது காலனிகளில் அகப்படுமா என்று தேடினார்கள். கானடாவில் ஆல்பேர்டா என்ற ஜில்லாவில் "சிறு துளியாக" அகப்பட்டாலும் "பெரு வெள்ளமாகத்" திரட்டலாமாம். (ஐக்கிய நாட்டிலிருந்து அங்கு அகப்படும் ஏராளமான ஹிலியத் தின் ஒரு சிறு பாகம் கூட வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்

யக்கூடாதென்று அந்தேசத்து சர்க்கார் சட்டம் இருக்கிறதாம். இவை யல்லாமலும் ஜோதிர்மயமான ரேடியம் போன்ற வஸ்துக்களிலிருந்து இது இடைவிடாது வெகு வேகத்துடன் பிரிந்து வெளிக்கிளம்பி வருகின்றதாம். ஒரு செக்கண்டுக்கு 12000 மைல் வேகத்துடன் வருகிற இந்த ஹீலியம் அம்பைக் கொண்டு ருதர்போர்ட் என்ற ரசாயனி வெடியுப்பு வாயுவின் (Nitrogen) அணுவைத் துளைத்து அதன் குணங்களை ஆராய்ந்திருக்கின்றார்.

சேகரிக்கும் விதம்

பனிக்கட்டி.⁰ டிகிரியில் ஜலமாக உருகுகிறது; உருகின ஜலம் 100 டிகிரியில் ஆவியாக மாறுகிறது. இதேமாதிரி எந்த வஸ்துவையும் கட்டி, திர, ஆவி ரூபமாக மாற்றமுடியும். ஆனால் ஆகாசக்காற்று, ஜலவாயு, முதலியன.⁰ டிகிரிக்கு கீழேவெகுதூரம் வரைவாயுவாகவே இருக்கின்றன; ஆனால் அதிகசீதளத்தின் பிரயோகத்தால் அவையும் திரவமாயும் கட்டியாவும் ஆகின்றன. எந்தவாயுவும், ⁰ டிகிரிக்குக் கீழே 273 வது டிகிரியில் வாயுவாகவே இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி ⁰ டிகிரிக்குக் கீழேயுள்ள 273 டிகிரியை சைபர் டிகிரி என்று வைத்துக் கொண்டால், பனிக்கட்டி 273 டிகிரியில் உருகும்; 373 டிகிரியில் ஜலம் நன்றாய் கொதிக்கும்.

இந்த முறையில் சிலவாயுக்களின் திரவமாகமாறும் நிலை எது எது என்று பின் வரையப்பட்டிருக்கின்றன.

ஹிலியம்	4·5	டிகிரி	Helium
ஜலவாயு	20 0	,,	Hydrogen
வெடி யுப்பு வாயு	79·0	,,	Nitrogen
பிராண வாயு	90·0	,,	Oxygen
ஆகாசக் காற்று	81·0	,,	Atmospheric air
நைடிரிக் ஆக்ஸைட்	120·0	,,	Nitric oxide
கரியமில வாயு	195·0	,,	Carbon-di-oxide
அம்மோனியா	240·0	,,	Ammonia
நீராவி	373·0	,,	Water vapour

இவைகளின் ஒவ்வொன்றின் உதவி கொண்டு எல்லா வித வாயுவையும் திரவமாக மாற்றிவிடலாம். 1908-ம் வருஷத்தில் ஹாலண்டு தேசம் லீடன் பட்டணத்தில் உள்ள கம்மர்லிங்கி ஒன்ஸ் என்ற சாஸ்திரி முதல் முதலில் ஹீலியத்தை திரவ ரூபத்தில்கண்டார் பின்னர் அதைக்கட்டி ரூபத்திலும் பார்த்திருக்கிறார்கள். ஆகவே இதுதான் நமக்குத் தெரிந்தவரை மிகக்குறைந்த டிகிரியில் திரவமாகிக் கட்டியாகிறது. ஆகாசக்காற்றை அதிகப் பாரத்தில் குளிரப் பண்ணினால் திரவமாகிறது ; எஞ்சின காற்றை மறுபடியும் அதிக பாரத்தில் குளிர வைத்தால், ஹீலியத்தின் சகோதரர்களான ஸீனன், (Xenon) கிரிப்டான் (Krypton) ஆர்கான், (Orgon) நீயான் (Neon)முதலியன திரவமாகின்றன. கடைசியாக ஹீலியம் குளிர்ந்து திரவமாகிறது: அமெரிக்கா தேசத்து இயற்கை வாயுக்களைக் குளிரப்பண்ணினால்; முதலில் சேற்று வாயு (Marshgas) வும், பின் ஜலவாயுவும் திரவமாகி, பிறகு ஹீலியம் மிஞ்சுகிறது ; இதை இன்னும் ஜாஸ்தியாகக் குளிரப்பண்ணினால் கடைசியில் அது திரவமாகக் கிடைக்கிறது. இப்படிச் சீதளவழியாகவே இதை மற்ற வாயுக்களினின்றும் வேறாகப் பிரித்து சேகரிக்கப்படுகிறது பங்களூர் ஆராய்ச்சி சாலைகளில் திரவக்காற்றை உண்டாக்கிஉபயோகிக்கிறார்கள். தேர்மாஸ் பிளாஸ்கு போன்ற பாத்திரங்களில் அதை விட்டு வைத்திருப்பது வழக்கம். அப்படியே திரவ ஹீலியத்தையும் செய்வார்கள்

குணங்கள்.

(1) ஹைடராஜன் அல்லது ஜலவாயுவுக்கு அடுத்தாப் போல் மிக இலேசாகவுள்ளது; அதாவது ஜலவாயுவைவிட இடைக்கு இடை இது இரண்டு பங்குதான் கனம் ஜாஸ்தியாகவுள்ளது. நீராவி 9 பங்கு அதிகம்; பிராணவாயு 16 பங்கு

அதிகம்; காற்று 14¼பங்கு அதிகம்; கரியமிலவாயு 22 பங்கு அதிகம். ஆகவே இடைக்கு இடை இலேசுத்தன்மையால் இது இரண்டாவது ஸ்தானமடைந்திருக்கிறது.

(2) வேறு ஒருமூலப் பொருளுடனும் சேர்ந்து ஒரு சேர்க்கைப் பொருள் தருவதில்லை. இதை எவ்விதத்திலும் மற்றப்பொருள்களுடன் சேர்ந்து மாறுதலடைவதில்லை. ஆகவே இதற்கு இரசாயன குணங்கள் ஒன்றும் கிடையாது. அதாவது, பிராணவாயுவில் அது எரிகிறதில்லை; பிராணவாயுவுடன் கலந்து வெடிப்பதுமில்லை.

(3) மின்சாரக் கங்குகள் (sparks) மற்றவாயுக்களில் விட இதில் வெகு இலேசாக ஊடுருவிப் பாய்கிறது.

(4) அதன் மாலுக்யூல்களில் (molecules) ஒவ்வொரு அணுவே (atom) உள்ளது. கிட்டத்தட்ட ஒருஸ்வயம்புவான வாயுபதார்த்தத்துக்குச் சமமாக அதைச் சொல்லலாம்.

(5) அதுவே எல்லாப் பதார்த்தங்களையும்விடக் குறைந்த உஷ்ணநிலையில் உருகவும் செய்கிறது. அதன் மூலமாகப் பனிக்கட்டியின் உருகும் உஷ்ண நிலையாகிய சைபர் டிகிரிக்குக்கீழே 270 டிகிரி வரையுள்ள குளிர்ச்சியை அடைய முடிகிறது.

உபயோகங்கள்.

(1) புகைக் கூண்டுக்கும் ஆகாசக்கப்பலுக்கும் இதை உபயோகப் படுத்தலாமென்று முன்னமே சொல்லப்பட்டது. கீழே குறித்த விபரங்களில் ஜலவாயுவை விட இது இந்த உபயோகத்துக்கு மேலானது.

(i) ஜலவாயுவைப் போல் எரிவதில்லை.

(ii) ஜலவாயுவைப்போல் 'படீர்' என்று வெடிப்பதில்லை.

(iii) இத்துடன் 100 க்கு 15 அல்லது 20 பங்குவரை ஜலவாயுவைச் சேர்த்தாலும், அந்த மிசிரம் ஆகாசக்காற்றில் வரும்போது எரிவதுமில்லை; வெடிப்பதுமில்லை.

(iv) ஜலவாயுவைவிட மூன்றில் ஒரு பங்கு குறை வாகவே ஆகாச கப்பலின் மேல் தோல் வழியாய் இது வெளி வரும் குணமுடையது.

(v) இதன் உஷ்ண நிலையைக் குறைத்தோ கூட்டியோ செய்து, ஆகாசக் கப்பலின் "லாகவ" த்தை மிகுதியாகவோ குறைவாகவோ செய்யலாம்

இந்தக் காரணங்களினால் இது பெரிதும் ஆகாயக் கப் பல்களுக்கு உபயோகமாகிறது. ஆனால் சண்டை சச்சரவு இல்லாத காலங்களிலும் இது வேறுவிதமாக உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.

(2) எலக்டிரிக் விளக்குகளில் வளைந்த திரிபோன்ற வஸ்து இருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். டங்ஸ்டன் (Tungsten) என்ற உலோகத்தினாலும் அத்திரி செய்கிறார் கள். அவ்விளக்குகளில் இந்த ஹீலியத்தை அடைத்து வைத் தால் சரியான பலனைத்தருகிறது என்று சோதனை மூலமாய் அறியக்கிடக்கிறது.

(3) கம்பி யில்லாத டெலிபோன் இயந்திர விஷயங் களுக்கு இது பிரயோஜனமாகிறது.

(4) சாதாரணமாக மின்சார சக்தியை ஒரு இடத்தி லிருந்து மற்ற இடங்களுக்கு வரவழைப்பதற்கு, கம்பிகள் உபயோகமாகின்றன. ஆனால் எல்லாக் கம்பிகளும் இதற்கு உதவா. செம்பு, அலுமினியம் முக்கியமாக மின்சார சக்தியை சீக்கிரத்தில் செலுத்துகின்றன. இரும்பு, ஈயம், தகரம் உதவா. ஆனால் இவைகளும் திரவ ஹீலிய உஷ்ண நிலையில் வெகு துரிதமாக—லக்ஷம்பங்கு அதிகமாக—மின்சாரசக்தி யைச் செலுத்துகின்றன. வஸ்துக்களின் குணாகுணங்கள் வெகு ஜாஸ்தியான குளிர் நிலைகளில் எப்படி எப்படி மாறு படுகின்றன என்று அறிவதற்கு இது ஒரு நல்ல சாதனமாக விருக்கிறது.

அதன் விலை.

1918-ம் வருஷத்தில் ஒரு கனவடி திரவஹீலியம் மூன்று பவுன் விலையாக இருந்தது. இப்பொழுது அதே அளவு ஹீலியம் ஐந்து அல்லது ஆறு பென்ஸுக்குக் கிடைக்கிறதாம் அதாவது 5 வருஷத்தில் 120 பங்கு விலை குறைந்து விட்டது ; இயந்திரச் சுளுவும் வேலைத்திறமையும் அவ்வளவு மிகுதியாய் விட்டது.

முடிவுரை.

கானடாவில் சால்கரி (Calgary) என்ற இடத்தில் சண்டையின் அநுகூலத்துக்காக பெரிய ஹீலிய ஆராய்ச்சி சாலை கட்டப்பட்டு சோதனைகள் நடந்தன. அதில் தேர்ச்சி பெற்ற மெக்லன்னன் (Mc Lennan) என்பவர் சமாதான காலத்திலும் அது ஊர்ஜிதததிலிருக்க வேண்டு மென்றும் அதைசெவ்வையாய் நடத்த 1,50,000 பவுன் வேண்டுமென்றும் அப்படிச்செய்வதில் சாஸ்திர அபிவிருத்தியில் நம்பிக்கையுள்ள லக்ஷாதிப் பிரபுக்களும் பல துரைத்தனத்தார்களும் ஒன்றுபட்டு உதவி செய்யவேண்டுமென்றும் 1920ம் வருஷத்தில் வேண்டிக்கொண்டனர், அப்படியே பல உதவிகள்கிடைத்தன . சென்ற ஜனவரிமீ 10உ யன்று டாரன்டோ சர்வகலா சங்கத்தார் ஆதரவில் ஒரு பெரிய "குளிர் ஆராய்ச்சி சாலை திறந்து" வைக்கப்பட்டது. அன்று வந்தவர்களுக்கு திரவஹீலியம், திரவஜலவாயு, திரவக்காற்று இவைகளின் குணாதிசயங்கள் காட்டப்பட்டனவாம்.

நம் நாட்டிலும் பங்களூர், கொடைக்கானல், நீலகிரி சிம்லா முதலிய இடங்களில் அம்மாதிரியான ஆராய்ச்சி சாலைக்கு இடமிருக்கிறது. பாமாவில் கிடைக்கும் மண்ணெண்ணெயுடன் வரும் இயற்கைக் காற்றில் ஹீலியம் இருக்கிறதா என்ற சோதனை செய்து பார்த்ததாகத் தெரியவில்லை. மற்ற ஆராய்ச்சிகள் விருத்தி யடையும்போது இதுவும் காலக்கிரமத்தில் நம் நாட்டில் விருத்தி யடையும்.

தமிழ் மொழிகள்

Tamil Terms

மனுஷ வங்காதி பாதம்

Human Anatomy

ஸ்ரீ தனேல் வி. சப்மன் என்னும் வைத்தியரால் மொழி பெயர்க்கப்பட்டு அமெரிக்கா லங்கை மிஷனைச்சேர்ந்த ஸ்ரீசமுவல் பி. கிறீன் என்னும் வைத்தியரால் திருத்தப்பட்டு 1872ம் வருஷத்தில் வெளியிடப்பட்ட மனுஷவங்காதிபாதம் என்னும் அரிய நூலின் கடைசியில் காணப்படும் அட்டவணையினின்றும் இம்மொழிகள் எடுக்கப்பட்டனவாகும்.

(40-ம் பக்கம் தொடர்ச்சி)

Caecum - அக்தகை, புரீதம்
,, (adj) - பீருத பீரு
Calamus scriptorius - கலமாக்கிரம்
Canal - குழல், கனுல், காதம், பாதை
,, accessory palatine - உபதாலு
,, alimentary - சீரணபாதை
,, anterior dental - முற்றசன
,, for Arnold's nerve - ஆணல் சிரைக்கு
,, auditory கேள்வி
,, carotid - கிரீவ
,, central of modiolus நாபிச்சுழிபுரை
,, for chorda tympani - ஆனகரச்சு

Canal of cochlea - கம்பு
,, dental, inferior - கீழ்த்தசன
,, ethmoidal - பாடீர
,, incisive - தாலுமுன்
,, infra-orbital - குவளைக்கீழ்
,, lachrymal - கண்ணீர்ப் பாதை
,, malar - கவுள்
,, maso- palatine - நாசித் தாலு
,, palatine - தாலு
,, of Petit - பெதிகாதம்
,, portal - வேசக
,, pterygoid - பாதவ
,, pterygo-palatine - பாதவதாலு
,, spiral, of cochlea - கம்பின்சுரி

Canal spiral, of modiolus - நாபிசசுழி
,, semicircular-திரிதடம்
,, for tensor tympani- ஆனைகமி ஹக்கியின்
,, vidian-விதிய
Canthus of eyelid - குடா, கோணம், புடோகம்
Capillary-தந்துகி, கபிலரி
Capsule-உறை
,, of Glisson-கிலிசன்
,, of lens-இயவ
,, of Malpighian bodies of kidney-மல்பீச்சிகணை
,, supra-renal - பிருககோபரி
Caput coli - அந்தகை, புரீதகம்
,, gallinaginis-குடு
Carotid - கிரீவ
Carpus - கைக்குளசு, கிலுத்தம்
Cartilage - முருநது, சிதகம், சாட்டிலாகு
,, articular - சந்தி முருந்து
,, arytenoid-மாடக
,, of bronchi-அசுக
,, circumferential - பரிதிநீ
,, costal-பழு
,, cricoid-ஊர்மிகை
,, of ear-மடல்
,, ensiform-வதி
,, of, epiglottis-செமி
,, fibre - இழை
,, interarticular - சந்தியிடை
,, intervetebral - வம்சியிடை
,, interosseous-என்பிடை
,, of larynx-கிருக
,, of nose-நாசி
,, of pinna-மடல்
,, reticular-ஆறுயக
,, semilunar of knee-பிறை

Cartilage of nasal septum - நாசிநடு
,, stratiform-படல
,, tarsal-இமை
,, thyroid-வீதண
,, triticea-பொடிமுருந்து
,, true-சவய
,, hyoid -வதி
Caruncula lachrymalis-உகி
,, mammillaries - பனசம்
,, myteformes - அரணிச்சேடம்
Cauda equina-லாங்கூலம்
Cava inferior - கீழ்க்குகாநாளம்
,, superior - மேற்குகாநாளம்
Cavernous body - குகாபங்கு, குகாபாகம்
Cavity - அறை, பள்ளம், அவடம்
,, cotyloid - கம்சம்
,, glenoid - சிறு பள்ளம்
,, of larynx - கிருகவறை
,, of pelvis - கூபகவறை
,, pulp - சதை யறை
,, sigmoid - பிறை
Cell - சிற்றறை, விலம், செல்
,, ethmoidal - பாடீர
,, hepatic - ஈரல்
,, pigment - நிற
Centrum Ovale - அண்டவம்
Cerebellum- சிறுமூளை, கோர்த்தகம்
,, hemispheres of - பாதிகள்
,, laminae of - படலங்கள்
,, lobes of - அம்சங்கள்
,, lobulus centralis - நடு அம்சகம்
,, peduncles of - பாசங்கள்
,, structure of - வியூகணம்

Cerebro-spinal axis - கோர்த்தக சேரு மத்தி
,, fluid - கோர்த்தக சேரு நீர்
Cerebrum - மூளை, கோர்த்தகம்
,, base of - அடி, கீழ்வனம்
,, interior of - உள்வனம்
,, labia of - இதழ்கள்
,, lobes of - அம்சங்கள்
,, sulcus - சுருள்
Cervical - கழுத்து, கிரீவ, கண்ட, கந்தர
Cervix - கழுந்து
,, uteri - கருப்பைக் கழுந்து
Chambers of the eye - அறை
Cheek - கதுப்பு, கொடிறு
Chest - நெஞ்சு, பிஞ்சரம், மார்பு மார், மருமம், உரம்
Chiasma or optic commissure - பார்வையுகம்
Chordae tendonae of heart - நசை ரச்சு
,, tendonae vocalis - குரல் நாண்
Choroid coat of eye - தாரகம்
,, plexus of lateral ventricle - குணம்
Chyle - அன்னரசம், பசம், கைல்
Chyli receptaculam - பசக் கூடு
Chyme - பூசம், கைம்
Cilia - கசம், சிலி
Ciliary body - சக்கரகம்
Circle of Willis - விலிஸ் சக்கரம்
Circular sinus - விருத்த தாரணி
Circulation of blood - இரத்தோட்டம்
,, ,, in foetus - சிசுவில்
Circumduction - சுழற்சி
Circumflex - சுற்று, பரிகமம்
Clavicle - செத்துரு காறை
Clitoris - சுமரி
Coat - படலம், உறை, கவசம்
Coccyx - புச்சம்
Cochlea - கம்பு
,, central axis of - காபிகம்
,, cupola of - தூபி
,, infundibulum of - பிரஞ்ஞனி
,, lamina spiralis of - சுரிவலகம்
,, membranous zone of - சவ்வணி
,, osseous zone of - என்பணி
,, scala of - சோபானம்
,, spinal canal of - சுழி புரை
Coeliac axis - உதரசாரி
Colon - பெருங்குடல், புரீதம், மலாந்திரம், கோலன்
Columnar corneae - தசை யூபம்
Column - கிலை, கம்பம்
,, of medulla oblongata - வடம்
,, of spinal cord - கொடியின் வடங்கள்
Columnar layer of retina epithelium - யூபாவரகம்
Commissure - யுகம்
,, of brain anterior முன்
,, of brain middle or soft - நடு
,, optic - பார்வை
,, *posterior* - பின்
,, of flocculus - தூலிகை
,, *of spinal cord grey* - நரை
,, *of spinal cord white* - வெண்
Conarium - பாலுகம்
Concha - கவடி
Condyle - முனி
Conglobate - ஏகபிண்ட

Conglomerate - ஏகராசி
Coni vasculosi - தசிரகுசுகம்
Conjunctiva - யோகினி, கஞ்சக்திவம்
Constrictor - சங்குசி, சுருக்கி
Cord- கொடி, நார், லதை, நாண் ரச்சு
,, spermatic - பீசக்கொடி, பீசலதை
Corium of skin - கோறியம், சருமம், உட்டோல்
Cornea - சிருஙகை, கர்ணி
Cornicula laryngis - கிருக திரணம்
Cornu - கொம்பு
Corona glandis - முகுடம்
Corpus albicantium - வெண் வர்த்துலம்
,, arantium - அரந்தி திரணம்
,, callosum - மகா யுகம்
,, cavernosum - குகாபங்கு
,, geniculatum - சானுகம்
,, dentatum - காதனி
,, fimbrium - பட்டகம்
,, luteum - பீதகம்
,, olivarium - காடினம்
,, pyramidalium - சிகரம்
,, padrigeminum - சதுககதுகம்
,, restiformium - வராடம்
,, spongiosum - சுபஞ்சபஙகு
,, striatum - வரை குன்று
Corpuscle - இம்மி, நுண், செசம், வடிகம்
,, Malphigian of kidney - மலபீசசி
,, of spleen - பிளிகை
Cortical substance of brain- நரைப் பதார்த்தம்
,, substance of kidney - தசிரபாகம்

Cortical substance of suprarenal capsules- களிப் பங்கு
Cotyloid cavity of Aceta (-) bulum - அசிதபுலம், கம்சம்
,, notch - கம்சவண்
Cremasteric fascia - பீசமேற்றி விருதி
Crest - புருவம், சிகை, சூடு
,, frontal - நெற்றிச் சிகை
,, of ilium - ஒக்கலைப் புருவம்; பாலிக புருவம்
,, occipital - பிடர்ப்புருவம்
,, internal - பிடருட்சிகை
,, of pubes - மேகன புருவம்
,, of tibia - நளக புருவம்
,, turbinated of palate inferior - கீழ்ச்சுருள்
,, turbinated of palate superior - மேற்சுருள்
Crista - புருவம், சிகை, சூடு
,, Galli - பாடீரசிகை
Crus - பாசம், கால்
,, cerebri - கோர்த்த பாசம்
,, cerebelli - கோர்த்தகபாசம்
,, of clitoris - சுமரிபாசம்
,, of corposa cavernosa- குகா பாக பாசம்
,, of diaphragm- விதான நிலை
,, of fornix - நதிக பாசம்
Crusta petrosa - பல்லுபலம்
Crypt, same as follicle - குதுவம், வலிகுல்
Crystalline lens - இயவம், லென்சு
Cul-de-sac - அக்தகை, பொக்கணம்
Cuneiform - கீலவ, கூனிவாம்
Cutaneous - சரும, தோல்

Cuticle - வெளித்தோல், பரிசருமம்
Cutis vera same as derma - உட்டோல், சருமம், ஸ்கின்
Cyst - பை, சிஸ்து
Cystis, same as bladder - சலப்பை, கிலோமம் ஊற்றும் பெட்டி

Dartos - அண்டகி
Decussation - குறுக்கிடல், குருசுகம்
Deciduous - இலையற்ற, பாதுக
Deep-உள், ஆழிய, கபீர, கம்பீர
Dental - தசன
,, follicle - தசனக்குதுவம்
,, groove - பற்சீதை
,, pulp - பற்சதை
,, sac - பல்லுறை
,, tubulus - பன்றுலகம்
Dentine - பல்லேணம்
Deposit as sediment - அடையல், அதகம்
Deposit as morbid growth- கைப்பு
Depressor - இறக்கி, நிபாதனி
Derma - உட்டோல், சருமம், ஸ்கின்
Descending - இறங்குகிற, அவரோகண
Descent of testicle - பீசமிறங்கல்
Development - உண்டாதல், விருத்தி
Diaphragm - விதானம்
Diaphysis - மத்தியாஸ்தி, இடையேணம், தியாவசி
Diarthrosis - சலனசந்தி
Diarthrosis rotatories - வர்த்தன சந்தி
Digastric - இருபீனி
Digestion organs of - சீரண உறுப்புகள்
Digital - விரல், அங்குலி
Dilator - விரிப்பட்டது, பிரசாரி, விஸ்தரணி, விரி
Diploe - துவிதம்
Dissection - விசேதனம்
Distribution- படருகை, வண்டனம்
Divergence - விரிதல், விசமம்
Diverticle - விகர்சணம், உபகிறி
Dorsam, same as back - முதுகு, வெரின்

Duct - தாரை, புரை, சிரோதம்
,, of Bartholine - பதோலின்
,, biliary - பித்த
,, communis choledocus பொது
,, of Cowper's glands - கூபர்கோள
,, cystic - மாயுக
,, excretory - கழி
,, hepatic - பித்த
,, of kidney - பிருக்க
,, laciferous - பால்
,, of liver - ஈரல், காளக
,, lymphatic, right - வலதுவபா
,, nasal - நாசிப்புரை
,, of pancreas - கணையதாரை
,, parotid - பரோட்டி
,, Stenan's - ஸ்தேனு
,, thoracic - உரதாரை
,, Whartonian - வார்ட்டனர்
Ductus arteriosus - நாடிசரம்
,, venosus - நாளசரம்
Duodenum- பசதம், துவிதினம்
Dura mater - பாலனி

Ear-காது, செவி, சிரோத்திரம், சோத்திரம்
Efferent - அபிவாக
Ejaculatory ducts - இணைதாரைகள்

Elastic - இசிவுள்ள, இசி, இலாஸ்திக

Elbow - முழங்கை, கூபாம்

Eminence-புடைப்பு, உத்தானம்

,, of acquaeductus fallopii வலோப்பிகாதபுருவம்

,, articular - சந்தி

,, canine - குகுர

,, collateral or pes-accessorius- உபசோதம்

,, frontal - நெற்றி

,, ilio-pectineal - மேகனபாலி

,, jugular - கந்தர

,, parietal - பித்திகை

Enamel - சவிகம், இனுமெல்

,, organ - சவிக உறுப்பு

,, rods - சவிகவேத்திரம்

Enarthrosis - சஞ்சாரசந்தி

Encephalon - மூளை, என்செவிலன்

Endocardium - கிரீகம், என்றுகார்டியம்

Endolymph - அந்தர்நீரம்

Ensiform appendix - ஏதி

Epidermis- வெளித்தோல், பரிசருமம்

Epididymis - பீசோபரி

Epigastrium - மேல்வயிறு, நெஞ்சாங்குழி, புரகுக்கியம், உத்தரோதரம்

Epiglotis - சேமி, எபிகிளட்டி

Epiphysis - அனுவஸ்தி

Epithelium - ஆவரகம், எபிதீலியம்

Epithelium squamous- செதிளாவரகம்

Erectile tissue-விம்மும் செசவு, உத்தோதி

Erection - கிமிர்ச்சி, உத்தை

Erector - கிமிர்த்தி, உத்தாபனி

Excito-motory - அருட்சலன

Extensor - நீட்டி. திராகி

Extremity - தலைப்பு, அந்தம்

Extremity lower- அதக்காயம்

,, upper - உத்காயம்

External - வெளி, புற, பகிர்

Eye - கண, அட்சி, நயனம், நேத்திரம், சக்கு

,, pupil of - கயனே

,, ball - கண்மணி, கண்விழி, விழி, விடாலம்

,, brow - கட்புருவம்

,, lash - இமை

,, lid - கண்மடல், நிமை

Face-முகம், வதனம், ஆனனம்

Facet - முகப்பு

Fallopian tube- சினைப்பாதை வலோப்பிகுழல்

Falx cerebelli - சிறுகுமல்

,, cerebri - குமல்

Fascia - விருதி

,, aponeurotic - வலச்ச

,, of arm - புய

,, cervical, deep - கழுத்தின் ஆழிய

,, ,, superficial - கழுத்து வெளி

,, costo-coracoid - பழுக்கணைச்சவ்வு

,, cremasteric - பீசமேற்றி

,, dentata - சாணை

,, dorsal of foot- பதமேல்

,, of foot - பாத

,, of forearm - சய

,, iliac - பாலி

,, inter-columnar - நிலையிடை

,, inter-costal - பழுவிடை

,, lata - தொடையுறை

,, lumborum - இடுப்பு

,, obturator - குந்தக

,, palmar - அங்கை

,, perineal deep - விடப ஆழிய

,, superficial- விடபவெளி

,, plantar - தல

Fascia proprius - சுய
,, spermatic - பீச
,, superficial - மென்
,, epicranial - கபால
,, temporal - கோர
,, of thorax - நெஞ்சு
,, of trunk - முண்ட
Fasciculi graciles. or Posterior Pyramids of Medulla oblongata - பின சிகரம்
Fasciculi teretes - ரச்சுகக் கற்றை
Fasciculi unciformes - அங்குச கற்றை
Fauces- சிகாணம், தொண்டை
Femoral arch - தொடைவில், ஊருவகிறம்
Fenestra ovalis - அண்டத்துவாரம்
,, rotunda-வட்டத்துவாரம்
Ferrein pyramids of - வெறைன் சிகரம்
,, tubes - வெறைன்குழல்
Fibre - இழை, சிருரம், வீபர்
Fibrin - புளிதசம், வீபரின்
,, of muscle. or musculine - மஸகுலின்
Fibro - cartilage - இழை முருந்து, வீபர்காடிலாகு
,, circumferential - பருதிதீர
,, inter-articular - சந்தியிடை
,, inter-osseous - என்பிடை
,, stratiform - படல
Fibrous rings - நசை வளையம்
Fissure - பிளப்பு, கமர், பகுகம்
,, auricular - செவி
,, of ductus venosus - நாளசர
,, for gall bladder-மாயுக
Fissure Glaserian-கிலசர், கேவணை
,, horizontal of cerebellum - திகந்த
,, longitudinal of liver - ஈரலின் நெடும்
,, longitudinal of cerebrum - மூளையின் நெடும்
,, of lung - சுவாசப்பையின்
,, maxillary - தாடை
,, of medulla oblongata - முகுள
,, portal - வேசக
,, pterygo - maxillary - பாதவதாடை
,, spheno-maxillary- சதுகதாடை
,, sphenoidal - சதுக
,, of Sylvius - சில்வியர்
,, transverse of cerebrum- குறுக்கு
,, umbilical - நாபி
,, for vena cava - குகாநாள
Flexor - மடக்கி, வணக்கி
Flocculus - தூலிகை
Foetus - சிசு
Fold - மடக்கு, மடி, மடிப்பு
,, aryteno-epiglottidean மாடகச் சேமி
,, recto-uterine - விரேகிச். சராயு
,, vesical - விரேகிக்கிலோம
,, vesico-uterine - கிலோமச் சராயு
Follicle - வலிகுல், குதுவம்
,, gastric - குக்கி
,, Leiberkuln - லீபர்கூன்
,, sebaccous - திண
,, simple - ஒற்றை
,, L. crypts - குழிக் குதுவம்

Fontanelle - வன்றனெல், உச்சி

Foot - பாதம்

,, dorsal region of - நிபதம்

Foramen - துளை. தொளை துவாரம், ரந்திரம்,

,, auriculo-ventricular - சிரவசடர

,, caecum - பீரு

,, in diaphragm - விதான

,, carotid - கிரீவ

,, condyloid - முளி

,, dental, inferior - கீழ்த்தசன

,, ethmoidal - பாடீர

,, incisive - தாலுமுன்

,, infraorbital- குவளைக்கீழ்

,, lacerum - தாரித

,, anterium - முன்

,, medium - நடு

,, posterium - பின்

,, magnum - மகா

,, malar - கவுள்

,, mastoid - சூசுக

,, mental - சம்ப

,, of Monro - மன்ரோ

,, obturator - குந்தக

,, olfactory - மோப்பு

,, optic - பார்வை

,, ovale of heart-அண்டவ

,, of sphenoid bene - அண்ட

,, palatine - தாலு

,, parietal - பித்திகை

,, pterygoid - பாதவ

,, pterygo palatine- பாதவதாலு

,, rotundum - திகிரி

,, sacral - பீடிகை

,, sacro-sciatic- பீடிகாசன

,, saphenous - பிரகட

,, spheno-palatine- சதுகதாலு

Foramen spinosum - முட்டொளை

,, sternal - வட்ச

,, stylo-mastoid - லேகனிசூசக

,, supraorbital-குவளைமேல்

,, Thebesii - திபெசி

,, vertebral - வம்ச

,, Vesalii - வெசாலி

,, of Winslow-வின்ஸ்லோ

Forearm- முன்கை, கணைக்கை, சயம்

Foreskin - முன்தோல், சிகுதி

Fornix - நதிகம்

,, body - காண்டம்

,, crura of - கால்கள்

Fossa - குழி, பதிவு, பள்ளம், நிமீனம்

,, of antihelix - எதிர்ச்சுருட்குழி

,, canine- குகுர

,, cystidis fellae - மாயுககமர்

,, digastric - இருபீனிப்பள்ளம்

,, digital - கணு

,, glenoid - கேவண

,, of helix - சுருள்

,, iliac - பாலிக

,, infra-spinous - புருவகீழ்

,, incisive - ஊரன

,, innominata - சுருள்

,, jugular - கந்தர

,, lachrymal - அசுரு

,, myraform - ஊரன

,, nasal - நாசியறைகள்

,, navicular of vulva வடிசக்குழி

,, occipital - பிடர்

,, ovalis - அண்டவ

,, palatine - தாலு

,, anterior - முன்

,, pituitary - சுவல்

நிரம்பியிருந்தது ; அவள் கள்ளமற்று, உற்சாகமாய், 'இளங் கன்று பயம் அறியாது' என்றபடி தன்னிச்சையாய் விளங்கினள். சொபையாவின் முகத்தோற்றம் ஒலிவியாவைப் போல அவ்வளவு அதிசயமானதன்று ; ஆனால் நிதானமாய் அடிக்கடி காரியசித்தி பெறுவதில் அதிக நிச்சயமாய் இருந்தது ; அவள் மெதுவாய் அடக்கமாய்,

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந் தற்று'.

என்றபடி நயமாய்ப் பேசினள். ஒலிவியா 'ஒரு முழுக்கிலேயே மண்ணெல்லாம் எடுத்துவிடுவது' என்பது போல ஒரே முறையில் முயன்று காரியத்தை விட்டுவிட்டாள். சொபையா 'பையச்சென்றால் வையந்தாங்கும்' என்பது போலப் பையப்பைய முயன்று காரியசித்திபெற்றாள்.

'கோலஞ் சிறந்த படியே
குணமுஞ் சிறந்தி ருக்கும்'.

என்றபடி சாதாரணமாய்ப் பெண்களுக்கு முகத்தோற்றத்தின் அளவாக குணமும் பொருந்தி யிருக்கும்; இது என் பெண்களிடத்தில் எப்படியோ சரியாய் அமைந்திருந்தது. ஒலிவியா பலபேர் காதலர்களைக் கோரினள் ; சொபையா ஒருவனைப்பெற விரும்பினள். ஒலிவியாவுக்குத் தணிக்க முடியாத பேராசை யிருந்ததனால் அடிக்கடி மனத்தாங்கல் வந்துகொண்டே யிருந்தது. பிறர்க்கு மனத்தாங்கல் உண்டாகும் என்கிற அச்சத்தால், சொபையா * தன்னன்னலத்தையும் நசுக்கினள். நான் உல்லாசமாயிருக்கையில் ஒலிவியா உற்சாகமாய் உறவாடினள் ; நான் விவகார நிலையில் சாதாரணமாயிருக்கையில் சொபையா தன்னுடைய இயற்கை அறிவைக்கொண்டு என்னோடு விவகரித்தாள். ஆனால் இந்தக் குணங்கள் இருவர்க்கும் எப்போதும் அளவுக்கு மிஞ்சி இருந்ததில்லை. ஒரே நாளில் அவர்கள் இருவரும் எத்தனையோ முறை, குணமாறினதை நான் பார்த்

* தன் + நல் + நலம் - தன்னுடைய மேன்மை.

இருக்கிறேன். கேவலம் ஒரு [1] துக்க உடுப்பால், வெளிவேஷக் காரியாகிய ஒலிவியா நாணமுள்ளவளாக மாறியிருக்கிறாள்; அவளுடைய தங்கையாகிய சொபையா, ஒரு புது [2] மேகலையால், இயற்கையாயுள்ள உல்லாசத்துக்கு மேல் [3] உல்லாசக்காரியாய் இருக்கிறாள். என்னுடைய மூத்தமகன் ஆக்ஸ்பர்டில் படித்து வளர்ந்துவந்தான்; அவனைப் படிப்பு மூலமான வேலையில் விடவேண்டும் என்று நான் எண்ணியிருந்தேன். என் இரண்டாங் குமாரனாகிய மோஸஸ் வீட்டிலேயே ஒருவிதமான கலப்புப் படிப்பிற் பழகிவந்தான். 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்றபடி அவனை நான் எந்த வேலைக்கும் வல்லவனாக்கிவிட நியமித்திருந்தேன். [1] இளையவர்களுடைய குணாகுணங்களைப் பற்றி ஒருவிதமாய்க் குறிப்பிட்டெழுத முயல்வது வீண் காரியம். அவர்களுக்கு [5] ஒப்புரவு தப்பற என்ன தெரியும்? சுருங்கச் சொல்லின் குடும்ப முகச்சாயல் எல்லாரிடத்திலும் பொருந்தியிருந்தது. சரியாய்ச் சொல்லுமிடத்தில், எல்லார்க்கும் [6] ஒரே குணம் என்று சொல்லலாம்—எல்லாரும் தருமகுணமுள்ளவர்கள்; களங்கமற்றவர்கள்; எதையும் எளிதில் நம்பக்கூடியவர்கள்; பிறன்கேடு சூழாதவர்கள்.

---

(1) துக்கவுடுப்பு - வெள்ளைக்காரர் துக்கக் குறியாய்த் தரித்துக் கொள்ளும் கருநிற உடை.

(2) மேகலை - நாடாவுமாம் (Riband)

(3) உல்லாசகுணம் பெற்றவளாக விளங்கி யிருசகிறான்.

(4) இளையவர்கள் - வயதுப்பிள்ளைகள் (ஆணும்பெண்ணும்).

(5) ஒப்புரவு - உலகநடை.

(6) ஒரே விதமான குணங்கள்,

இரண்டாம் அதிகாரம்.

குடும்பப் பொல்லாங்குகள்.

[செல்வச் சேதம் என்ன செய்யும் ?—தக்கோர் பெருமையைத் தரணியில் வளர்க்கும்.]

எங்கள் குடும்பத்துக்கு வேண்டிய இகசுக காரியங்களெல்லாம் முக்கியமாய் என் மனைவியின் பொறுப்பில் இருந்தன ; பரசுக விஷயங்களையெல்லாம் நானே பார்த்து வந்தேன். எனக்கு ஜீவனதாரமான கோவில் வரும்படி வருஷத்துக்கு முப்பது பவுன் வந்தது அதை என் * குருத்வத்துக் கடங்கியுள்ள போதகர்களுடைய அநாதைப் பிள்ளைகட்கும் கைம்பெண்களுககும் உதவினேன். எனக்கு வேறு சொந்தவரும்படி இருந்தது. ஆகையால் நான் கோவில் வரும்படியைக் கவனிக்கவில்லை. என் கடமையைக் கைம்மாறு கருதாமல் செய்வதற்கு, எனக்கு உள்ளுக் குள்ளேயே ஒருவித இன்பவுணர்ச்சியிருந்தது. என் உத்தியோகத்துக்கு அடுத்தபடியில் ஒருமேல் விசாரணைக் காரனை வைக்கப்படாதென்பது எனது தீர்மானம். என் † விசாரணை ஸ்தானத்துக் குள்ளடங்கிய ஒவ்வொருவனும் எனக்குத் தெரிந்திருக்கவேண்டும், கலியாணமானவனை மித வாழ்வுவாழத் தூண்டவேண்டும், கலியாணமாகாதவனைக் கலியாணஞ் செய்துகொள்ள ஏவவேண்டும் என்பது எனது முடிவான எண்ணம். ஆகையால் சில்லாண்டுகளுக்குள் ஒரு பொதுஜன வாக்குப் பிறந்தது. அது என்ன சொல் லிற்று ?—வேக்பீல்டில் மூன்று புதுமையான இல்லாமைகள் ஏற்பட்டன—பெருமையில்லாத ஆசாரியன், மனைவியில்லாத வாலிபன், குடியர் இல்லாத மதுக்கடை.

---

* குருத்வ ஆட்சிஸ்தானத்தில் வாழ்ந்தவகத.

† குருவாட்சி ஸ்தானம்.

கலியாணம், எப்போதும் எனக்குகந்த விஷயங்களில், ஒன்ருய் இருந்தது. ஆகையால் அதைப்பற்றி அநேக * வியாக்கியானங்கள் எழுதி, அதனுல் அடையும் சுகத்தை † எண்பித்துக் காட்டினேன். எனக்கொரு சிறந்த கொள்கையிருந்தது; அதைப்பற்றி நான் ஆதரவாய்ப் பேசினேன். ‡ விஸ்டன் கோட்பாடு எனக்கு உகந்ததா யிருந்தது. ஆங்கிலக் கோவிலைச் சார்ந்த § வேத போதகன் ஒவ்வொருவனும், முதல் மனைவி மரித்த பிறகு இரண்டாங் கலியாணம் செய்து கொள்வது, சட்ட விரோதம் என்பதே அது. இதை வேறு விதமாய் ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம். கண்டிப்பான ||ஏகபத்தினி விரதனு யிருக்கவேண்டும் என்பதே என்னுடைய மதிப்பு.

இந்தப் பெரிய தர்க்கத்தில் நான் ஆதியிலிருந்தே பழகி வந்தேன். ஆகையால் அதைப்பற்றி அநேக அருமை யான நூல்கள் எழுதியிருக்கிறேன். சில சிறு புஸ்தகங் களை நானே வெளியிட்டேன். அவைகள் விற்கவேயில்லை அதனுல் எனக்கொரு சமாதானமான எண்ணம் உண்டா யிற்று. அவைகளைச் சுகானுபவிகளான சிலரே வாசித்தார் கள் என்பதாம். என் நண்பரிற் சிலர், இதை எனது தோல் விக் குறியாகக் கொண்டார்கள்; ஆனுல் அது அதிசயம்! என்னைப்போல் அவர்கள் அதை நெடு நாளைய யோசனையி லுள்ள விஷயமாகக் கொண்டிருந்ததில்லை. எவ்வளவுக் கெவ்வளவு அதைப்பற்றி நான் ஆலோசித்தேனே அவ்வள வுக் கவ்வளவு அஃதொரு பெரிய விஷயமாய்த் தோன்

---

* வியாக்கியானங்கள் = பிரசங்க வியாசங்கள்.

† நிரூபித்துக் காட்டினேன்.

‡ வில்லியம்விஸ்டன் = ஏகபத்தினி விரதர், இங்கிலாந்தில் (1667-1752.) இந்த வருஷங்களில் இருந்த மதபோதகர். தம் மனைவியின் கல்லறைக் கல்லின்மேல் 'வி. விஸ்டனுக்கு இவள் ஒருத்தியே மனைவி' என்று எழுதினவர்.

§ குரு.

|| ஒருமனையாட்சி.

றிற்று. விஸ்டனைவிட நான் இன்னும் ஒருபடி அதிகமாக ஏறிப்போய் என்னுடைய நியாயங்களைக் காட்டினேன். அவர் எப்படித் தம்மனைவியின் கல்லறைக் கல்லின்மேல், 'இவள் ஒருத்தியே வில்லியம் விஸ்டன் மனைவி' என்று எழுதியிருந்தாரோ, அப்படியே நானும், என் மனைவி உயிரோடிருந்தும் ஒரு * சமாதிசாசனம் எழுதினேன். அதில் அவளுடைய பேரறிவைப் புகழ்ந்தேன்; சிக்கனத்தைச் சீராட்டினேன், † மரணபரியந்தம் அவளுடைய அடக்கத்தைப் பாராட்டினேன். அதைச் சீராய்ப் பேர்த்தெழுதி அழகான சட்டம்போட்டுச் சமையல் அறைக் கதவில் மாட்டி வைத்தேன். அது அநேக அரியபெரிய காரியங்களுக்கு அநுகூலமா யிருந்தது. எனக்கு என் மனைவி செலுத்த வேண்டிய கடமைகளை எச்சரித்தது; அவைகளுக்காக அவள் விஷயத்தில் நான் பாராட்டவேண்டிய நன்றியை ஞாபகப்படுத்திற்று; 'நல்ல பெயர் எடுக்கவேண்டும், புகழ் பெற வாழவேண்டும்' என்று அவளுக் கொருவித உற்சாகம் உண்டாக்கிற்று; அடிக்கடி அவளுடைய மரணத்தை அவளுக்கு நினைப்பூட்டிற்று. அது அடியிற் காட்டிய ‡ வெண்பாவின்படி இருந்திருக்கலாம்:—

'அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என் தூங்கும் என்கண் இரா'

(அல்லது)

'அறிவுடை யாளே அகப்பொருளைப் போற்றும்
நெறியுடை யாளே நிலையாய்ச்—செறியும்
அடக்கம் உடையாளே அன்புடையாளே நீ
திடக்கற் புடன்வாழ் திகழ்ந்து'

என்றும் இருந்திருக்கலாம்.

---

* சமாதிசாசனம்-கல்வெட்டு.

† மரணபரியந்தம் எனக்கவள் கீழ்ப்படிந்து நடப்பாள் என்ற நம்பிக்கை.

‡ திருவள்ளுவர் தமது மனைவியின் சரம தசையிற் பாடியது.

கலியாணத்தைப் பற்றி அடிக்கடி நான் புகழ்ந்து பேசுவதைக் கேட்டதினுலோ, என்னவோ, என் மூத்தமகன், * கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனே, தன் ஆசையை ஒரு கோவில் குருக்களின் மகள் மேற் செலுத்தினுன். அவர் எங்களுக்குச் சமீபத்தில் இருந்த பிரதான குரு. ஆகையால் அவளுக்குப் பெரிய சீதனங் கொடுக்க இருந்தார். அவளுக்குச் சீதனமே வேண்டியதில்லை. அவள் பெயர் மிஸ். அரபெல்லா வில்மட். என் இரு குமாரத்திகள் தவிர எல்லாரும் அவளைப் பேரழகி யென்றே ஒப்புக்கொண்டார்கள். அவளுடைய ஒளிவீசும் மேனி நிறம், இளமை, வளமை, மாசின்மை முதலியவைகளே எடுத்துக்காட்டிற்று. அவளுடைய இன்பரஸத் தோற்றத்தின் ஏற்றத்தால், முதியவர்களும் புதியவர்களாய் மருண்டு அவளைக் கவனித்து நோக்காமலிரார் என் மகனுக்குத் தக்கபடியே நான் கலியாணம் முடிப்பேன் என்பதை உணர்ந்திருந்த அவளுடைய தந்தை வில்மட் என்பவர், இந்த வதூவர சம்பந்தத்தை வெறுக்கவில்லை. ஆகையால் இனி வரூஉம் விவாக சம்பந்தத்திற்கு முந்தி நடக்கும் எல்லாச் சடங்குகளுக்கும் இரு குடும்பங்களும் ஒன்றாய் வாழ்ந்தன விவாகத்திற்காக ஒரு பெண்ணை வேண்டிக் கழிக்கும் நாட்கள் தாம், நமது வாழ்நாளில் அதிக இன்பரஸமான நாட்கள் என்று எனக்கு அனுபவத்தில் தெரியும் ஆகையால் அந்நாட்களை நீட்டி ஓட்ட நான் மெத்தச் சித்தம்பொருந்தி யிருந்தேன். வதூவரர்கள் இருவர்க்கிடையிலும் நடந்த பற்பல விநோத வேடிக்கைகள் நாளுக்குநாள் அவர்களுடைய காதலை வளர்த்தபடி தோன்றின. அதிகாலையில் நாங்கள் சாதாரணமாய்க் கீத நாதத்தால் விழித்துக்கொண்டோம். உல்லாசமான நாட்களில் குதிரையேறி வேட்டைக்குப்போவது வழக்கம். காலை உணவுக்கும் பகல் உணவுக்கும் இடையிலுள்ள காலத்தைப் பெண்கள், உடுப்பிலும் படிப்பிலும்

---

* கலாசாலை.

செலுத்தினர்கள் ; ஒரு பக்கம் படிப்பார்கள், உடனே தங்கள் அழகைக் கண்ணாடியிற் பார்ப்பார்கள். இந்த வழக்கம் ஞானிகளுக்கும் உண்டு என்று சொல்லலாம். இது கல்வி யழகு முதலிய எல்லா அழகுகளினும் ஏற்றமாயிருந்தது. பகல் உணவுக் காலத்தில் என் மனைவி முதன்மையாயிருந்தாள். அவள் தானே ஒவ்வொன்றையும் இசைவாய் அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தினாள். [1]குடும்பத்தில் தாயா யிருப்பவளுக்குத் தகுதியான நிலைமை இது. ஆதலால், ஒவ்வொரு வட்டிலிலும் வட்டித்துள்ள பதார்த்த வகையின் வரலாற்றை விளங்க வுரைத்தாள். பகல் [2] உணு உண்டு முடிந்தபோது, பெண்கள் எல்லாரும் எங்களை விட்டுப் போய்விடப் படாது என்பது என் எண்ணம். ஆகையால் உடனே நான், உணவுப் பீடங்களை அப்பால் அகற்றிவிடக் கட்டளை யிட்டேன் ; சில வேளைகளில் [3]இசை ஆசிரியரின் உதவியால், பெண்கள் அதி அற்புதமான இசைப்பாட்டுப் பாடுவார்கள். வீதி விலாசமாய் நடத்தல், தேயிலைக் குடிநீர் [4]பருகல், நாட்டுக் கூத்தாடல்; முதலியவைகளால் மற்றப் பகற்பொழுது சீட்டாடாமலே சுருங்கிக் கழிந்தது. நான் எந்தச்சூதும் தகாது என்றே வெறுத்தேன் ஆனால், [5]வட்டாடல் ஒன்றை மட்டும் கொஞ்சம் கையாடினேன். அதற்காக எனக்கொரு பழந்தோழர் இருந்தார். அவரும் நானும் ஒவ்வொரு சமயத்தில் ஆட்டத்துக்கு [6]இரு பென்னி வைத்து ஆடினோம். கடைசிமுறை நாங்கள் ஆடினபோது நேரிட்ட தோல்விக் குறி ஒன்றை இங்கே எடுத்துரைக்காமல் விடேன்—நான் [7]நாலத்தோரஞ்சு விழ

(1) 'அடிசிற் கினியாள்' என்றது இதுபற்றியே,என்க.

(2) உணு-உண்டி.

(3) கீத போதகர்-ராகம் கற்பிக்கும் உபாத்தியாயர்.

(4) பருகல்-குடித்தல்.

(5) வட்டாடல்-சொற் கேட்டான் (சொக்கட்டான்) ஆடல்.

(6) இருபென்னி-ஓரணு காலு தமபிடி (ஓரணு) என்னலுமாம்.

(7) பாய்ச்சிகை யிரண்டில் ஒன்றில் நான்கு புள்ளியும் மற்றொன்றில் ஒரு புள்ளியும் விழுவது.

வேண்டு மென்று பாய்ச்சிகையை உருட்டினேன். அது ஒற்றைப் புள்ளிகளாலாகிய *தொகையே விழுந்தது. இப்படி விடாமல் ஐந்துமுறை உருட்டியும், ஒவ்வொரு தடவையும் தொகையே விழுந்துகொண்டு வந்தது.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. கடைசியாக, வாலிப வதூவரர்கள் இருவர்க்கும் கலியாண நாள் குறிப்பது தகுதி யென்று நாங்கள் எல்லாரும் எண்ணினோம். அவர்களும் அதை ஆவலாய் விரும்பினார்கள். கலியாண ஏற்பாடு நடந்த காலத்தில் என் மனைவி உழைத்த உழைப்பின் பெருமையையும், என் பெண்மக்கள் பார்த்த பார்வையின் அருமையையும் பற்றி நான் அதிகம் எழுதவேண்டியதில்லை; உண்மையாய்க் கூறுமிடத்தில், என் ஞாபகம் வேறொரு பக்கம் திரும்பிற்று; சிறு புத்தகம் ஒன்று முடிக்க வேண்டியது; அது சீக்கிரத்தில் வெளியாக வேண்டியது; அதனால் எனக்கு உகந்த ஏகபத்தினி விரதக் கோட்பாடு நிலை நிற்க வேண்டியது; விவகாரத்துக்கும் ஒழுங்குக்கும் இது ஒரு பெரிய உத்தம காரியமென்று எண்ணினேன்; ஆகையால், இதை நான் அதி உற்சாகத்தோடு எனது பழந்தோழர் †வில்மட்டுக்குக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இதற்காக என்னை அவர் புகழ்வார் என்று நிச்சயித்திருந்தேன். ஆனால் அவர் நான் எண்ணியபடி இல்லை. என் ‡எதிர் கொள்கையை ஆவலாய்ப் பின்பற்றி யிருந்தார். இந்த விஷயம் எனக்கு அதி விரைவில் வெளியாயிற்று. இதற்குக் காரணமும் விளங்கிற்று; அந்தச் சமயத்தில் உண்மையாய் அவர், நாலாவது மனைவியை மணக்க நாடியிருந்தார். இதுதான் யாதொரு சந்தேகமு மின்றிக் கடுமையான விவாதத்துக்கு ஆதாரமாயிருந்தது. எனக்கும் அவர்க்கும்

---

* ஒவ்வொன்றிலும் ஒரு புள்ளியே விழுவது, தொகை-Dhaga

† வில்மட்-விக்காரின் மூத்தமகனுக்குப் பெண் கொடுப்பவர்.

‡ எதிர் கொள்கை-ஏகபத்தினி விரதத்துக்கு மாறான கொள்கை (பல மனை வாழ்க்கை.)

ரிடம் முத்துப்பந்தரும் வித்தியாமண்டபமும், வாயிற்றோரணமும் பெற்று அவற்றைத் தன் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் உலகமெலாம் போற்ற ஸ்தாபித்ததும் இவர்மூலமாகத் தான். மூவேந்தரெனச் சேர்த்து எண்ணப்படுகிற சேரசோழபாண்டியர் தாம் ஒவ்வொரு காலத்தில் கூம்பு கோட்டிமயமுதல் குமரியாறுவரையுள்ள நாடுகளைக் கையகப்படுத்தி ஆண்டதற்கு அறிகுறியாகத் தத்தம் கொடிகளாகிய வில்லையும், புலியையும், கயலையும் இமயத்தில் பொறித்ததும் இம்மறப்படை உதவிகொண்டன்றோ.

இவர் போருக்குச் செல்லுகையில் தற்காலத்தார் போலவே அணிவகுத்துச் செல்லுதல் மரபு. படைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். முற்படை முன்னே முடுகிச் சென்று பகைவரைப் பொரும். அது செல்லுகையில் எங்கும் தூசி கிளம்பி வானை மறைக்கும். அதனால் அச்சேனை வெள்ளத்தின் எண்ணிக்கையை ஒருவாறு மதிக்கலாகும். தூசி என்று முற்படை பேர்கொண்டது துகளெழப் புறப்பட்டுத் தாக்குவதாற்போலும்! இடைப்படை இடையிற் செல்லும். முற்படையில் போரில் பொருது வீழ்ந்தோரிடத்தை நிரப்பவும், பொருது தளர்ந்தோரை இளைப்பாறச் செய்யவும், முற்படை வென்ற நாடுகளைக் கைநழுவவிடாமல் காக்கவும் இப்படையோர் உதவுவர் எனலாம். கடைப்படை கூழை யெனப்படும் இதுவே அரசனுக்கு மூலடலம். இதில் போரில் கைவந்த வீரர்பலர் இருப்பர். ஆயினும் தூசிப்படையை நோக்கினல் தொகையில் இப்படைகூழைதான். கைச்சண்டை செய்து மாற்றார் வலியைத் தொலைக்கும் அந்நாளில் முற்படையின் தொகை பன்மடங்கு அதிகமாகவே இருக்க வேண்டுமென்பது சொல்லாதே அமையும்.

இனிப் பகைவர் தம்நாட்டின்மேல் படையெடுத்துவரின் அவரைத்தடுப்பதற்கு வழிகளென்ன விருந்தன வென்பதை ஆராய்வோம். தமது நாட்டின் நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப அரண்களை அமைத்து அரசர்கள் பகையை எதிர்த்தனர். அவ்வரண்கள் நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண்

என நான்கு வகைகளாக அமைந்திருந்தன. இவையனைத்தும் ஒருங்கே ஓரிடம் காணப்படினும்படலாம். அன்றி யாதேனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவை காணப்படினும் படலாம். துறைமுகப் பட்டினத்திற்குக் கடலே நீரரண். உண்ணாட்டு நகர்க்கு அகழ்தான் நீரரண். கடற்றுறைப்பட்டினங்களையும் சேர்த்தாண்டுவந்த முடிமன்னர்கள் கப்பற்படையமைத்துக்கொண்டு பிறநாடுகளைக் கைப்பற்றியதாகவும் பின்வரும் மேற்கோள்களால் வெளியாகின்றது,

" கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும் "
(சிலப்பதிகாரம்)

" நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக"
(புறநானூறு)

காட்டரண்:—சோழர் தலைநகராகிய உறையூரும்; வேங்கைமார்பனது திருக்கானப்பேரெயிலும் சிறந்த காட்டரணைப் பெற்றிரா நின்றன. நகர்ப்புறமெங்கும் முட்காடு அடர்த்தியாய் வளர்க்கப்பட்டுவந்தமையின், இதுபோன்ற நகர்களைப் பிடிப்பதற்கு முக்கியமாய்க் காட்டுவழிகளைக் கைக்கொள்ளவேண்டியிருந்தது. இம்முயற்சியில் பகைவரது திறனும், ஆண்மையும் பெரும்பாலும் பயன்பெறு தொழியும். தன்னிலத்துறு குறுமுயல் தந்தியின்வலிதன்றோ ?

மலையரண்:—பாரியது பறம்பு, எழினியது குதிரைமலை, வல்விலோரியின் கொல்லிமலை, மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்மலை முதலியன பெரிய மலையரண்களையுடையவை. இவ்வரண்கள் பகைவரால் முடுக்கப்பட்டகாலத்தில் அரசர்க்குப் புகலிடமாகவுள்ளவை. நீண்டமுற்றுகையை எளிதில் ஏற்கவல்லவை மலைவளங்களோடு கூடியவை. அதனால் தீஞ்சுளைப்பலாவின்பழமும், கொழுங்கொடி வள்ளிக்கிழங்கும், சிற்றிலைவெதிரின் நெல்லும், தீஞ்சுவைத்தேனும் அங்கே மலிந்து கிடக்கும். இவையே மலையரண் காக்கும மாண்புடையார்க்குமே தக்க உணவாகும். வேள்பாரி போன்ற சில குறுநில மன்

னர்கள் குருவிகளை வளர்த்து, நெற்கதிர்களைக்கொத்தி வரும்படி பயிற்றி, அவற்றால் மலையரண் காப்போரை அருத்தி வந்தாரெனவும் கூறுவர்.

"உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
இரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇய ரோராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு"

என அகநானூற்றில் வருவதைக்காண்க.

நிலவரண் :—இது மருதநில நகர்களைக்காக்கும் புறமதில்களையும் ஆழ்ந்த அகழிகளையுமுடைய கோட்டையைக் குறிக்கும். இவ்வரணை முற்றியோரைத் தடுப்பதற்கு 24 விதப்பொறிகளுக்கும் அதிகமாகவே முன்னாளில் மதில்களில் அமைத்திருந்தாரெனச் சிலப்பதிகார அடைகலக்காதை, 207-217 அடிகளால் தெரியவருகின்றது. இவைகள் புறநானூற்றில் இப்பெயரால் கூறப்படாமற் போயினும், அவை அக்காலத்திலு மிருந்தனவென்பதற்கு ஐய மொன்று மில்லை.

அமரெனில்,

திங்களும் நுழையா எந்திரப் படுபுழை
கண்மாறு நீட்ட நணிநணி யிருந்து
குறும்பல் குறும்பில் ததும்ப வைகி — புற. 177
பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கை — ,, 181
அருங்கடிமுனை அரண்போல — ,, 210

என்ற அடிகள்மேற்கூறியதை வற்புறுத்தும். சிந்தாமணிமுதலிய நூல்களால் பிற்காலத்தார் வேறுபல பொறிகளையும் அமைத்துக்கொண்டாரென்பது வெளியாகின்றது. இவற்றுட் சில யவனரால் அமைக்கப்பட்டவையென்று நச்சினார்க்கினியர் கூறுவர். கோட்டை பிடிபட்டால் தப்பியோடியுய்வதற்கு மயிற்பொறிபோன்ற விமானங்களைப் பிற்காலத்தார் பண்ணினார்கள். அரசன் தப்பியோடுவது அவன் புகழுக்கிழுக்காத

வின் அவன் ஒருபோதும் தப்பியோடான். தான் இறப்பினும் தன்குலத்தொருமகன் இருந்தால் தன்குலத் தாழ்வுபின்னெரு காலம் அம்மகனல் நீக்கப்பெறுமென்று நினைத்து, பால் மணங்கமழும் சிறுவனிருப்பின் அவனையாவது, அல்லது கருவுற்றிருந்த மனைவியிருப்பின் அவளையாவது; எந்திரப் பொறிமேலேற்றிப் புறம்போக்கித்தான் பகையைப்பொருது மனமொப்பி மாய்வன். இவ்வழக்கம் நம் நாட்டில் இராஜ புத்திரர்க்குள் சிறிது காலமுன்வரை நடைபெற்று வந்ததை யாவரு மறிவர்.

போர்க்குக்காரணங்கள் :—முற்காலத்தில் முடிவேந்தர்க் குப் போர் விளைக்கப் பலகாரணங்கள் ஏற்பட்டன. அவற்றுள் முதன்மையாக அவரது படைவலியையும், தோளின் தினவையும், மனவாசையையும் செப்பலாம். மெலியோர்மேற் சென்று அவர் நாட்டைக் கவர்ந்துகொள்வது அரசருடைய இயற்கைத்தீக்குணம். பாணர் புகழ்ச்சிக்கிலக்காய் நாடெங் கும் தமது வீரச்செயல்கள் பறையறையப்படவேண்டு மென் பதே அவரது முக்கியநோக்கம். இவ்வாறு ஒருவரது புகழை மற்றோரசர் அவைக்களத்தில் எடுத்தியம்பினல், தமது வீரத் திற்கு இழுக்குவந்ததாகப் பாவித்து அவ்வரசர் படை கூட்டிப்போருக்கெழுவர். இங்ஙனமன்றி, மேன்மையாகப் பாராட்டிப் பரிசளிக்கப்பெற்ற பாணர்கள் அப்பார்த்திபனை மதியாது மானபங்கஞ்செய்து தம்மை என்றும் ஆதரிக்கும் பிரபுவையே போற்றுவர். இதனல் இருவேந்தர்க்கும் போர் நிகழ்தலு முண்டு. சிலசமயங்களில்

“வையங் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது
இடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப”

கடந்தடு தானையொடு போர்விளைப்பர் சில அடல்வேந்தர்கள். போர் தொடங்குவதன் முன்னர் பகைவர்நாட்டிலுள்ள

“ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யிரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்புகடி விடுதும் நும்மரண் சேர்மினென"

பறை சாற்றுவர். இதுவே தருமயுத்தம். இதற்கு விரோதமாகத் தமிழரசர் ஒரு போதும் நடவார்.

இதுபோலவே சண்டையில் புண்பட்டோரையும், முதுகிட்டோரையும், படையிலாதோரையும், பதுங்கி யொளித்தோரையும், சரண்புகுந்தோரையும் வருத்துவது வீரரது செயலன்றென அவ்வரசர் கொள்கை யாதலின், அன்னோரை மறந்தும் அவர் வருத்தார். போர் மூண்டதும் இரு படைகளும் மகா வீராவேசத்துடன் போர் புரியும். வீரர்கள் முன்னிட்ட காலைப் பின்னிடார். வெட்டுண்டிறந்து வீர சுவர்க்கம் புகுவரே யன்றிப் போர்க்களத்திற் பின்வாங்கார். புலவர் வரைந்துள்ள போர்க்களக் காட்சிகளெல்லாம் அப்பெருமக்கள் கண்கூடாகக் கண்டெழுதியவை யாகும். இபபொழுது நடந்த அகோர யுத்தத்தைக் கேட்கும் நமக்கு அஞ்சாமையும், வீரமும், யுத்தத்திற் சுவையும், தறுகணாண்மையும் படைத்துள்ள தமிழரின் போர்க்களச் சிறப்பு ஒரு வியப்பாகாது. போர் முடிவில் வெற்றிகொண்ட வரசர்கள் வேள்வியொன்று கொற்றவைக்கு இயற்றுவித்துக் கொள்ளைகொண்ட பொற் குவியலைப் புலவர்க்கும், பாணர்க்கும், வீரர்க்கும், இறந்து பட்டோரது இல்லத்தார்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் ஒரு பகுதி கொண்டு, தம்நாட்டில் இரண்டொரு வருஷம் இறை தவிர்த்திட்டு, நாட்டா ரனைவரு மின்புறக் கண்டு, தாமும் களிபபுடன் வாழ்வா. தமிழாக்குள் இவ்விதம் போர் நிகழ்வதன் தொடக்கத்தில் இருதிறத்தாரும் ஒற்றர்களை ஏவி, வழி துருவிப் பூசல் விளைத்து ஆநிரை கவர்வர். அவ்வாறு செய்யும்போதும், அதைப் பகைவர் மீட்கும்போதும், பகைவர் நாட்டின் மேற் படை கொண்டு செல்லும்போதும், நகரின் மதிலை முற்றும்போதும், அதைக் காக்கும்போதும், இவ்வாறாக இரு திறத்தார்க்கும் பெரும்போர் நிகழும் போதும், வெற்றியை யாரேனு மொருவர் பெறும் போதும், வெவ்வேறு மலர் மாலைகளை அவ்வத் தொழிலுக்கு

அறிகுறியாக அரசர்களும், அவரது வீரர்களும் அணிந்து கொள்வதுண்டு. மேற்கூறிய திணைகளில் முதல் எட்டிற்கும் இவ்வாறணியப்படும் மலர் பற்றியே பெயர் வந்தது. இனி இத்திணைகளை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

வெட்சித்திணை.

ஓரரசன் தன் பகைவருடன் போரவெண்ணினால் முதலில் அவரது ஆநிரையைக்கவர நினைப்பான். அடிபிடி சண்டைக்கு மாட்டைப்பிடி என்பது பண்டைவழக்கு. அதற் கறிகுறியாக வெட்சிமாலையை அவனது வீரர்கள் சூடுவர். சில வேளைகளில் அரசனுடைய ஏவுதலின்றியே வீரர்கள்தாமே பகையரசனுடைய பசுக்கூட்டத்தைக்கவர்ந்து தாம்குடித்த கள்ளின் விலைக்காகக் கொடுப்பதுமுண்டு இதைப்பற்றிய விசாரம் ஈங்கு நமக்கில்லை. நாம் மன்னுறு தொழிலாகிய நிரை கவர்தலையே இங்குக்கவனித்தல் வேண்டும். இவ்வாநிரை கவர்தல் தொடக்கமுதல் முடிவுவரை பலதுறைகளையுடைய தாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தருணத்தல் நிகழ் வதைக்குறிக்கும்

பகையரசனுடைய பசுக்களைக்கவர நினைத்தவுடன் அர சனது மறவர்கள் வெட்சிப் பூவைச் சூடிக் காலிலே செருப் பைத்தொட்டுத் துடிகள் ஒலிப்பப் பகைவர் பசுக்கள் நிற்கும் காட்டிடத்தே செல்லக்கருதி, விரிச்சிகேட்டு, கடத்தற்கரிய வழியிடத்தேகல்லென்று நடப்பர். விரிச்சியாவது • நற்சொற் கேட்பது. எக்காரியத்தைத் தொடங்கினாலும் நிமித்தம்பார்த் து நன்முகூர்த்தத்தில் அதைச்செய்வதே அவரது மரபு. [புறம். 41, 124, 204, 229.] அன்றேல் அவர்கள் ஒருகாரியத் தையும் செய்யார். இதுபோலவே அவர்கள் கனவிற்காணப் பட்டதையும், உற்பாதமாய் கனவிற்காணப்பட்டதையும் பின் வரும் தீயவற்றின் அறிகுறியென நினைத்தனர். வானில் நக்ஷத்திரத் தோற்றம் நம்மாழ்வார், யேசுகிருஸ்து முதலிய மகான்களின் பிறப்பை உணர்த்தியதுபோல, நக்ஷத்திர வீழ்ச்சி அரசன்போன்ற பெரியாரின் இறப்பைத் தெரிவிக்கு மென்றும் அவர்கள் கொண்டனர்.

இவ்வாறு புள் நிமித்தமும் நன் முகுத்தமும் பார்த்துச் சென்ற வீரர் தமது ஒற்றர்மூலம் வேற்றுப்புலத்திலுள்ள பசுக்களின் அளவும், அவற்றைக்காத்து நிற்கும் படையின தளவும் தெரிந்துகொண்டு, தமதிஷ்டம்போல் மேய்ந்துதிரி யும் பசுக்கூட்டத்தை நோக்கிச்செல்வர். அவர்கள் செல்லும் போது கழுகும்பருந்தும் அவரைத்தொடர்ந்துவட்டமிட்டுக் கொக்கரித்துச்செல்லும். இரவில் பகைப்புலமடைந்ததும் பகைவர் உணராமல் நிரைப்புறத்தே ஒடுங்கியுறைந்து, தரு ணம் வாய்த்தவுடன் அப்பகைவரது அரணைவளைத்துக் கொண்டு ஊரைக்கொளுத்திப் பூசல் விளைப்பர். பின்பு ஊர்க் கொலை நடக்கும். அதில் வெட்சியைமலைந்தோர் வெற்றிபெற் றால் அவர்கள் ஆரவாரித்துக் கன்றுடனே பசுநிரையைக் கைக்கொள்வர். இதுகண்ட மறவர்கள் ஆநிரையை மீட்கக் கருதிக் கரந்தைமலரை அணிந்துகொண்டு, ஏகோபித்துச் செல்வர் இவர்களையும் வெட்சியார் தலைசிதறத் தாக்கி வெற்றி பெற்று, தாம்கொண்ட பசுக்களை சுரத்திலே மெல்லி தாக நடத்தித் தம்மூர்நோக்கிச் செல்வர்.

இவ்வாறு வெற்றியுடன்வரும் வீரரது துடியின் ஒலி கேட்டவுடன் அவரது வரவை எதிர்நோக்கியிருக்கும் வீரர் களும் வேட்டுவிச்சியர்களும் அவர்களை எதிர்கொண்டு அழைத்துவருவர். மன்றத்திடத்தே ஆநிரையை நிறுத்தி வைத்து தண்டத்தலைவர் அல்லது அரசனது ஏவலால்அதைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்வார்கள் அவற்றில் ஒரு கூறு ஒற்றர்க்கும், நிமித்தகனுக்கும். பாரிசிலர்க்கும், துடியர்க்கும் அவ்வவர்களுக்குத் தகுந்தபடி அளிக்கப்படும்.

II. கரந்தை.

வெட்சியாரின் வெற்றியைக் கண்டவுடன் கரந்தையா ரிற் சிலர் தமது தண்டத் தலைவரிட மோடி நடந்ததைத் தெரிவிப்பர் உடனே அவர்கள் தடாரியை அறைந்து தம் மினத்தாரைப்போர்க் கழைக்கவும் யாவரும் கரந்தை மாலையை யணிந்து கொண்டு கையில் வேலினைத் தாங்கி, தம் வீரக் கழல்கள் ஒலிப்ப, கூற்றுவன் போலும் நோபித்து

ஆநிரையை மீட்க எழுவர். இவர்கள் புறப்படும்போது மிக்க ஆரவார முண்டாகும். அவர்கள் ஆநிரை சென்ற சுவட்டைப் பற்றிக்கொண்டு, பகைவர் அறியாமல் அழற் பரந்த காட்டிலே தம் சுடர்வேல் ஒளிவிடச் சென்று, வெட்சியாரைக் கிட்டிச் சூழ்ந்து, புலிக்கணமும், சிங்கமும், போர்க்களிறும், போன்று போர்புரிவர். இவ்வாறு நெருங்கிச் செய்யும் சண்டையிலே விழுப்புண் பட்டிறப்போர் பலர்; தாம் ஒருவராக நின்று பொருவாரை எதிர்விலக்கித் தம்புகழ் நிறுத்துவோர் சிலர்; பகை வீரர்களைக் கவந்த மாக்கித் துடிகொட்டித் தம் வீரக் கழலொலிக்க அடிமேலடியிட்டு ஆடுவோர் ஒரு சிலர்; தம் வேலினுக்குக் குடர் மாலை சூட்டித் திரித்து ஆடுவோர் ஒரு சிலர். இவ்வாறாக ஒவ்வொருவரும் தமது வீரத்தையும் மானத்தையும், பெருமையையும் போர்க்களத்தில் நிறுத்துவர். வெற்றிபெற்ற கரந்தையார் யாவரும் களித்துக் கூத்தாடித் தம்மை யுயர்த்திக் கூறுவர். வேந்தனும் அவர்க்குத் தண்ணளி செய்வான். வடித்த வாண்மறவர் வேந்தனது எளிமையையும், அவனது குடி நிலையையும் எடுத்துக் கூறுவர். அப்போர்க்களம் வந்து பரிசில் கேட்கும் யாழ்ப்பாணர் வாட்போரிற் பட்ட வீரருக்குக் கையறுநிலை பாடுவர்.

இதன்பிறகு கரந்தையார் தாமீட்ட பசுக்கூட்டங்களை ஓட்டிக் கொண்டு மெல்லத் தமது நாடு நோக்கிப் போவர். இதற்குள் இவரது வெற்றியை ஒற்றரால் அறிந்த அவரது இனத்தார் யாவரும் ஒருங்குதிரண்டு அவர்களை எதிர்கொள்வர். மீட்கப்பட்ட பசுக்கள் சொந்தக்காரரிடங் கொடுக்கப்படும். காணாமற்போனவற்றிற்குப்பதில் பசுக்களும் அளிக்கப்படும். போர் வீரர்களுக்கும் தண்டத் தலைவர்க்கும் அரசன் நிலங்கள் வழங்கிப் பொன்னும் மணியும் வாரி யிரைப்பான். யாவரும் சந்தோஷமாக விருப்பர்.

III வஞ்சி.

இவ்வாறு ஆநிரை கவர்தலும் மீட்டலும் நிகழ்ந்தபிறகு அரசர்க்குள் தீராப் பகை நேர்ந்து ஒருவரது மண்ணை ஒருவர் வௌவக்கொள்ள நினைத்து நாட்டில் வாழ்வோர் அஞ்சப்